# என் வருங்கால லட்சியம்

16/11/2020

## நான் ஒரு மருத்துவரானால்

**குறிப்புச் சட்டகம்**
1. முன்னுரை :-
2. என் மருத்துவ கனவு :-
3. நான் ஒரு மருத்துவரானால் :-
4. என் வருங்கால லட்சியம் :-
5. இலவச மருத்துவம் :-
6. சமுதாயத்தை உயர்த்துவேன் :-
7. முடிவுரை :-

**முன்னுரை :-**

உலகில் பல்வேறு தொழில்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஏதாகிலும் ஒரு தொழிலைத் தங்கள் வாழ்க்கை லட்சியமாக கொண்டிருப்பர். ஆம் அப்படிப்பட்ட லட்சியம் எனக்கும் உண்டு. நான் ஒரு மருத்துவரானால்.

**என் மருத்துவ கனவு :-**

கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல தூங்க விடாமல் செய்வது".

"கனவு காண்பவர்கள் தோற்பதில்லை,
கனவு காண்பவர்கள் மட்டுமே
தோற்கிறார்கள்".

அத்தகைய கனவு நனவாகும் போது வாழ்வே அவர்களுக்கு வெளிச்சமாகிறது.

எனக்கு இத்தகைய கனவு தோன்றுவதற்கு முக்கியக் காரணம் இன்றைய நாட்டின் நிலைமை. ஆம் கொரோனா என்ற மிக்க கொடிய வைரஸ் நம் நாட்டை புரட்டிப்போட்டதுதான். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு செவிலியர்களும், மருத்துவர்களும் பல்வேறு

உதவிகளையும், ஆலோசனைகளையும்,
தன்னம்பிக்கையையும் கொடுத்தனர். அதைப் பார்த்த பிறகு தான் எனக்கும் கனவு காண ஆசை வந்தது. அதுவே என் வருங்கால கனவானது.
ஆம் என் கனவு நான் ஒரு மருத்துவரானால்.
நானும் ஒரு மருத்துவராக வரவேண்டும் என்ற வைராக்கியம் என்னும் உறுதி அதிகமாகிக் கொண்டே வருகிறது.

நான் ஒரு மருத்துவரானால்:-

நான் ஒரு மருத்துவரானால், முதலில் ஒரு அரசாங்க மருத்துவமனையில் பணிபுரிவேன். பல்வேறு தரப்பட்ட நோயாளிகளுடன் பழகி, அவர்களின் பிரச்சினையைக் கண்டறிவேன். அவர்களை அன்பாக விசாரித்து, நோய்க்கேற்ற மருந்து கொடுப்பேன். அவர்களிடம் நல்ல பெயரைச் சம்பாதிப்பேன். கைராசிக்கார மருத்தவர் என அனைவரும் போற்றும் வண்ணம் நடந்து கொள்வேன்.

என் வருங்கால லட்சியம்:-

"தெளிவான கண்ணோட்டம் இல்லாத தடுமாற்றம் திசை தெரியாத குழப்பம்".
"வெற்றி பெற வேண்டும்
என்ற பதற்றம் இல்லாமல் இருப்பதுதான்
வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி".
என்றார் அப்துல் கலாம் ஐயா.

என்னுடைய வருங்கால லட்சியம் ஒரு சிறந்த மருத்துவராக ஏழைமக்களுக்கு இலவசமாக பணிபுரிவதுதான். அதற்காக கடுமையாக படித்து ஒரு நல்ல மருத்துவராகி நம் நாட்டு மக்களுக்கு சேவை செய்வது தான் என் வருங்கால லட்சியம்.

## இலவச மருத்துவம் :-

அடுத்து, நான் சொந்தமாக ஒரு மருத்துவ மையம் திறப்பேன். அது ஒரு நிபுணத்துவ மையமாக இருக்கும். அங்கு பலவித நோய்களுக்கும் நிபுணர்கள் இருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்வேன். ஏழைகளுக்கு அங்குச் சிறப்புக் கழிவில் மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வேன். மிக ஏழைகளாக இருப்பின், இலவச மருத்துவ வசதிகள் கிடைக்குமாறு பார்த்துக் கொள்வேன். என் மருத்துவ நிபுணத்துவ மையத்தில், பல சிறந்த மருத்துவர்களை வேலைக்கு அமர்த்துவேன்.

நான் ஒரு மருத்துவரானால் பள்ளிகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனைகளை அடிக்கடி மேற்கொள்வேன். கண், பல், தோல் இன்னும் ஏனைய பிரச்சினைகள் உள்ள மாணவர்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் வழங்குவேன். நான் சொந்தமாக அறவாரியம் ஒன்றை நிறுவி, இத்தகைய மாணவர்கள் இலவச மருத்துவ வசதிகள் பெறுவதை உறுதி செய்வேன்.

## சமுதாயத்தை உயர்த்துவேன் :-

நான் ஒரு மருத்துவரானால், என்னை உயர்த்திய சமுதாயத்தையும் மறக்க மாட்டேன்.

"கணத்திற்கு கணம், நேர்மையாய், துணிவாய்,
உழைக்கிறவன் கரங்களே அழகிய கரங்கள்""

என் அறவாரியத்தின் வழி, பள்ளிக்கூடம், கோயில் போன்றவற்றிற்கு என்னால் ஆன உதவிகளைச் செய்வேன். மேற்படிப்பை மேற்கொள்ள முடியாத ஏழை மாணவர்களுக்கு, என் அறவாரியத்தின் வழி கல்வி உபகாரச் சம்பளம் வழங்குவேன். அவர்களும் என் போல் மருத்துவர்களாகி, .. வாழ்க்கையில் உயர உதவி புரிவேன்.

முடிவுரை :- என் வருங்கால லட்சியம்

நான் ஒரு மருத்துவரானால் என் கனவுகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்வேன். என்னுடைய கனவு நிறைவேற கடமையாக படிப்பேன். என் கனவுக்கான பாதை கல்வியே என நான் உணர்வேன். எனவே, கல்வியில் என் முழுக்கவனத்தையும் செலுத்தி வருகிறேன்.

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்.

X ———— X